**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**
**முன்னிலை :- திருமதி.Dr.R.லதா M.A., M.L., Ph.D.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2026ஆம் ஆண்டு மே திங்கள் 12ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரை 29 ஆம் நாள்**

**வாழ்க்கைப் பொருளுதவி கோரும் மனு எண். 16/2023**
**CNR.No.TNTV02-006340-2023**

1) மைனர்.திவேஷ்சுதன், வயது.04
த/பெ.மதன்(எ) சங்கரவேலவன்
கீழவீதி,
அச்சுதமங்கலம்,
நன்னிலம்தாலுக்கா முன்சிபி,
திருவாரூர் மாவட்டம்.

2) திவ்யா, வயது.30,
க/பெ.மதன் (எ) சங்கரவேலவன்
த/பெ.பன்னீர்செல்வம்
கீழவீதி,
அச்சுதமங்கலம்,
நன்னிலம் தாலுக்கா முன்சிபி,
திருவாரூர் மாவட்டம். ... **மனுதாரர்கள்**

**(மைனருக்காக அவரது தாயாரும்,
இயற்கை காப்பாளருமான 2ம் மனுதாரர்
மூலமாக)**

**//எதிர்//**

மதன் (எ) சங்கரவேலன், வயது.31/2025
த/பெ.சங்கரநாராயணன்,
மாரியம்மன் கோவில் தெரு,
நன்னிலம் தாலுக்கா ,
திருவாரூர் முன்சிபி,
திருவாரூர் மாவட்டம். ... **எதிர்மனுதாரர்**

LATHA Digitally signed by LATHA
Date: 2026.05.12
15:50:44 +0530

இம்மனுவானது கு.வி.மு.ச.பிரிவு 125இன்படி இந்நீதிமன்றத்தில் 18.08.2023 அன்று தாக்கல் செய்யப்பட்டு 23.08.2023 அன்று M.C.No.16/2023 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.R.அய்யப்பன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.G.T.மணி மற்றும் திருமதி.P.கபிநயா ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இன்று (12.05.2026) இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 125இன் கீழ் எதிர்மனுதாரர் மாதந்தோறும் 1ம் மனுதாரரின் இருப்பிடம், மருத்துவம், உணவு, உடை மற்ற பராமரிப்பிற்கு ரூ.10,000/-மும், 2ம் மனுதாரரின் இருப்பிடம், மருத்துவம், உணவு, உடை மற்ற பராமரிப்பிற்கு ரூ.20,000/-மும் ஆக கூடுதல் ரூ.30,000/-ஐ ஜீவனாம்சமாக கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள் மனுவின் சுருக்கம் –**

**1.1)** 2ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 28.01.2018 நன்னிலம் ஸ்ரீ ராகவேந்திரா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின்போது 2ம் மனுதாரருக்கு 25 பவுன் நகையும், எதிர்மனுதாரருக்கு இரண்டு பவுன் செயின், 1 பவுன் மோதிரமும், ரூ.1 இலட்சம் மதிப்பில் ராயல் என்ஃபீல்டு புல்லட் பைக் வாங்கிக் கொடுத்தும், ரூ.2லட்சம் மதிப்பிற்கு கட்டில் பீரோ, மெத்தை



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:50:53 +0530

வாஷிங்மெஷின் வாங்கிக் கொடுத்தும் வெள்ளியில் வெள்ளிவிளக்கு மற்றும் குங்குமச்சிமிழ், பித்தளை மற்றும் எவர்சில்வர் வீட்டு உபபோகப் பொருட்களை ரூ. 2 இலட்சம் மதிப்பில் சீராக செய்துள்ளனர்.

**1.2)** திருமணத்திற்கு முன்பு 2ம் மனுதாரருக்கு வேறொரு நபருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தநிலையில், அந்த நபரின் குணாதிசயங்கள் 2ம் மனுதாரருக்கும், அவரது பெற்றோருக்கும் தெரியவந்ததால் அந்த திருமணம் ரத்து செய்யப்பட்டு அந்த விவரம் அறிந்த எதிர்மனுதாரர் அவரது உறவினர் மூலம் 2ம் மனுதாரரை பெண்கேட்டு திருமணம் செய்துள்ளார்.

**1.3)** திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் இல்லத்தில் கறிவிருந்திற்கு ஏற்பாடு செய்து அதில் 2ம் மனுதாரரின் பெற்றோர் கலந்துகொண்டபோது எதிர்மனுதாரரின் தாயார் திருமணத்தின்போது 2ம் மனுதாரருக்கு செய்த சீர்பொருள்கள் குறைவாக உள்ளது எனவும், எதிர்மனுதாரரால் புதிதாக குடியேறிய வீட்டிற்கு கூடுதலாக சாமான்கள் தேவைப்படுவதாகவும் அதனை வாங்கிக் கொடுக்கவில்லை என 2ம் மனுதாரரின் பெற்றோரை விருந்தினர்கள் முன்னிலையில் பேசி சாப்பிட விடாமல் துரத்தியுள்ளார்.

**1.4)** இந்நிலையில், எதிர்மனுதாரர் அவரது தாயாரின் செயல்களை கண்டிக்காமல் தினசரி மது அருந்தி விட்டு குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி பணிக்கு செல்வதாக தெரிவித்துவிட்டு பணிக்கு செல்லாமல் இருந்து வந்துள்ளார். அதன்பின்னர் தாய்மைபேறு அடைந்திருந்த 2ம் மனுதாரரை எதிர்மனுதாரர் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்ல மறுத்து



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:00 +0530

உன் பெற்றோரை அழைத்துசெல், செலவு ஏதும் செய்ய மாட்டேன் என்று தெரிவித்து கொடுமைப்படுத்தியுள்ளார்.

**1.5)** அந்த விபரங்களை 2ம் மனுதாரர் அவரது பெற்றோரிடம் தெரிவித்தபோது 06.05.2018ல் வாடகை கார் மூலம் திருவாரூர் மருத்துவரிடம் பரிசோதனைக்கு அழைத்துச் சென்று குழந்தை பெறும் வரை 2ம் மனுதாரரரின் பெற்றோர்களே கவனித்துவந்தபோது 1ம் மனுதாரர் பிறந்தவுடன் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரரை எதிர்மனுதாரரின் இல்லத்திற்கு வருமாறும், இல்லையென்றால் வாழ வைப்பது குறித்து பரீசீலனை செய்ய நேரிடும் என்று கூறியுள்ளார்.

**1.6)** 2ம் மனுதாரரருக்கு ஆகஸ்ட் 2018ல் அவரது பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்ட வளையலணி விழாவின்போது எதிர்மனுதாரரின் பெரியப்பா மற்றும் பெரியம்மா கலந்து கொண்டதை கேள்விப்பட்டு அங்கு வந்த எதிர்மனுதாரர் தகராறில் ஈடுபட்டு அணிவிக்க வைத்திருந்த வளையல்களை உடைத்தும், பொருட்களை சேதப்படுப்படுத்தியும், சாப்பிட்டதற்காக ரூ.200/– தொகை கொடுப்பதாகவும் கூறி கொடுமைப்படுத்தியுள்ளார்.

**1.7)** கடந்த 25.11.2018 அன்று பிறந்த 1ம் மனுதாரரை பார்க்க வந்த எதிர்மனுதாரர் தகப்பன் என்ற முறையில் 1ம் மனுதாரருக்கு எவ்வித கடமைகளும் செய்யாததால் 2ம் மனுதாரர் 1ம் மனுதாரருக்கு அவரது பெற்றோரின் மூலம் அனைத்து தேவைகளையும் செய்துகொண்டுள்ளார். அதன்பின்னர், எதிர்மனுதாரர் 2ம் மனுதாரரையும், குழந்தையையும் வீட்டிற்கு அழைத்துசெல்லாமலும், தொடர்பு கொள்ளாமலும் இருந்து வந்தபோது ஆகஸ்ட் மாதம் 2019ல்



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:13 +0530

2ம் மனுதாரரை தொடர்பு கொண்டு எதிர்மனுதாரரருக்கும், அவரது தாயாருக்கும் பிரச்சினை ஏற்பட்டு மதுவில் விஷத்தை கலந்து குடித்துவிட்டதாக தெரிவித்ததை கேட்டு 2ம் மனுதாரர் எதிர்மனுதாரரை காப்பாற்றவேண்டும் என்று நன்னிலம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 4 நாட்கள் உடனிருந்து கவனித்து வந்தபோது எதிர்மனுதாரரின் சகோதரி மருத்துவமனைக்கு வந்து அங்கிருந்தவர்கள் முன்னிலையில் 2ம் மனுதாரரை கேவலமாக பேசி, எதிர்மனுதாரர் அவரது சகோதரியின் துர்போதனையின்பேரில் அடித்து சித்ரவதை செய்துள்ளார்.

**1.8)** இந்நிலையில் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரரையும், குழந்தையையும் வாழ அழைத்து சென்று மது அருந்திவிட்டு வந்து 2ம் மனுதாரரை அடித்தும், குழந்தையின் பிறப்பை தவறாக விமர்சித்தும் வந்துள்ளார். எதிர்மனுதாரரின் தாயார் திருச்சி சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தபோது 2ம் மனுதாரரிடம் உன்னை யார் இங்கு வரச்சொன்னது வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் காணவில்லை, எல்லாவற்றையும் பெற்றோர் வீட்டில் எடுத்து கொடுத்துவிட்டதாக கூறி கேவலமாக பேசி கொடுமைப்படுத்தியதை எதிர்மனுதாரர் வேடிக்கை பார்த்து கொண்டிருந்துள்ளார்.

**1.9)** இந்நிலையில், கடந்த 2020ல் 2ம் மனுதாரரின் பெரியப்பா மகன் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக 2ம் மனுதாரருடன் கட்டாயத்தின்பேரில் கலந்து கொண்ட எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு தெருவாசிகள் முன்னிலையில் 2ம் மனுதாரரையும்,



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:22 +0530

அவரது குடும்பத்தாரையும் கேவலமாக பேசி தன்னால் குடிப்பழக்கத்தை நிறுத்த இயலாது என்றும், 2ம் மனுதாரர் தேவையில்லை, மது அருந்துவது மட்டுமே வாழ்க்கை என்றும், 2ம் மனுதாரர் மற்றும் குழந்தை வீட்டிற்கு வரும் பட்சத்தில் கொலை செய்யக்கூட தயங்க மாட்டேன் என்று தெரிவிக்க மது அருந்திவிட்டு வருவதை தொடர்ச்சியாக செய்து வந்ததால் கடந்த ஏப்ரல் 2021ல் பணியிடை நீக்கம் செய்த விவரம் 2ம் மனுதாரருக்கு தெரியவந்ததால் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனுதாரரையும், குழந்தையையும் புறக்கணித்து விட்டார்.

**1.10)** இந்நிலையில் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் புறக்கணித்து வந்ததால் இனியும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை என எண்ணி திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருக்கும் 2ம் மனுதாரருக்கும் 28.01.2018 நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்ய கோரி ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022 தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாமல் 07.01.2023 அன்று தோன்றாதரப்பினராக கருதப்பட்டு 20.03.2023 அன்று மேற்படி திருமணத்தை ரத்து செய்து உத்தரவிட்டநிலையில் 2ம் மனுதாரர் அவரது குழந்தையுடன் பெற்றோர் வீட்டில் வசித்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்.

**1.11)** எதிர்மனுதாரர் தமிழக தீயணைப்பு துறை விழுப்புரத்தில் தீயணைப்பு வாகனத்தின் ஓட்டுநராக வேலை பார்த்து மாதம் ரூ.40,000/- பெற்றும், நன்னிலம் தாலுக்கா, மாரியம்மன் கோவில்



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:31 +0530

தெருவில் ரூ.30,00,000/- மதிப்பில் ஆர்.சி.சி. இருமாடி கட்டிடமும் இருந்து வருகிறது. மேற்படி எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு தகப்பனார் என்ற முறையிலும், 2ம் மனுதாரருக்கு கணவர் என்ற முறையிலும் பராமரிக்க வேண்டியது அவசியம் என்பதாலும், எதிர்மனுதாரர் 1ம் இளவர் மனுதாரருக்கு உணவு, உடை, இருப்பிடம், பராமரிப்பு செலவு, ஆகியவற்றிற்கு மாதந்தோறும் ரூ.10,000/-மும், 2ம் மனுதாரருக்கு உணவு, உடை, இருப்பிடம், பராமரிப்பு செலவு ஆகியவற்றிற்கு மாதந்தோறும் ரூ.20,000/-மும் வாழ்க்கை பொருளுதவியாக வழங்கிட உத்தரவிடவேண்டி இந்த மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

**2.1)** இந்த எதிர்மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண உறவு, 1ம் மனுதாரரின் பிறப்பு ஆகிய சங்கதிகளை தவிர மற்றவை எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

**2.2)** 2ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்பே வேறொரு நபருடன் நிச்சயிக்கப்பட்டு பின்னிட்டு திருமணத்தை 2ம் மனுதாரரும், அவரது பெற்றோரும் நிறுத்திவிட்டனர். அதன்பின்னர் 2ம் மனுதாரரை எதிர்மனுதாரர் உறவினர் மூலம் திருமணம் செய்துகொண்டுள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:40 +0530

**2.3)** திருமணத்தின்பயனாக 2ம் மனுதாரர் கருவுற்றிருந்தபோது 2ம் மனுதாரருக்கு வேண்டிய அனைத்து பணிகளையும் எதிர்மனுதாரர் செய்துவந்தபோதும், 2ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரரின் தாயாருக்கும் கருத்துவேறுபாடு இருந்து வந்ததால் எதிர்மனுதாரரின் தாயாரை மூத்தகுடிமகன் என்றும் பாராமல் அவமதித்து, அவருக்கு எவ்விதமான அடிப்படை தேவைகளை செய்து கொடுக்காமல் இருந்து வந்தநிலையில், 2ம் மனுதாரரின் வளையல் அணி விழாவின்போது எதிர்மனுதாரரின் தாயாருக்கு தெரிவிக்காமல் எதிர்மனுதாரருக்கும், அவரது பெரியம்மா, பெரியப்பாவிற்கு தகவல் தெரிவித்துவிட்டு வளையல் அணி விழாவின்போது எதிர்மனுதாரரை அவமதித்து பிரச்சினை செய்துவந்துள்ளார்.

**2.4)** இந்நிலையில், 2ம் மனுதாரருக்கு குழந்தை பிரசவம் முடிந்து கடந்த 2018ம் வருடம் மே மாதம் 2ம் வாரத்தில் மனுதாரின் பெற்றோர் மனுதாரர்களை பார்க்க எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்தபோது மனுதாரர்களை ஒருவாரம் அழைத்து செல்வதாக கூறி அழைத்துசென்றுவிட்டு அழைத்துவந்து விடுவதாக கூறிவிட்டு தற்போது வரை 2ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வராததால் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் உறவினருடன் 2ம் மனுதாரரை சேர்ந்து வாழ அழைத்தபோது 2ம் மனுதாரர் எதிர்மனுதாரரை பிடிக்கவில்லையெனவும், எதிர்மனுதாரருக்கு மனைவியாக இனி வாழ்க்கை நடத்தமுடியாது என மறுத்தும், எதிர்மனுதாரரை அசிங்கமாக திட்டி அவமானப்படுத்தியுள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:46 +0530

**2.5)** இந்நிலையில், எதிர்மனுதாரர் 2ம் மனுதாரரை மன்னித்து, 1ம் இளவர் மனுதாரரின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு கடந்த 25.01.2022 அன்று சேர்ந்து வாழ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோதும் 2ம் மனுதாரரர் அதனை பெற்றுக்கொண்டு 07.02.2022 அன்று சேர்ந்து வாழ விருப்பமில்லை என பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதன்பின்னர், திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022 அன்று விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்து 02.03.2023 அன்று எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**2.6)** இதனால் மனஉளைச்சலுக்கு ஆளாகி எதிர்மனுதாரர் கடந்த 2021 ம் வருடம் பூச்சிமருந்து குடித்து மருத்துவமனையில் தொடர்சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 12.07.2024 முதல் 15.10.2024 வரை பணிக்கு செல்லாமல் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.மேலும், எதிர்மனுதாரர் பணிக்கு செல்லும்போது 2025ம் வருடம் மார்ச் மாதம் விபத்து ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டதால் சரிவர பணிக்கு செல்லமுடியாமல் அன்றாட தேவைகளை அவரது தாயாரின் உதவியுடன் பூர்த்தி செய்து வருகிறார்.

**2.7)** இந்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரை விட பட்டமேற்படிப்பு படித்து தற்சமயம் நன்னிலம் தாலுக்கா அலுவலகத்தில் பணியாளராக பணிபுரிந்து வருகிறார். 2ம் மனுதாரரர் அவரது பெற்றோருக்கு ஒரே மகள் என்பதால் வாரிசு அடிப்படையில்



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:53 +0530

ஆர்.சி.சி.கட்டிடம், மெத்தை வீடு, நன்செய் நிலங்கள் ஆகியவை இருந்து வருகிறது.

**2.8)** 2ம் மனுதாரர் எவ்வித காரணமுமின்றி எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் எதிர்மனுதாரர் எவ்வித பொருளுதவியும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. ஆகவே, இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டி இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் –** இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**4)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5)** 2ம் மனுதாரர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ 7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1, எ.ம.சா.2 விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6)** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், எதிர்மனுதாரர் எவ்வித காரணமுமின்றி மனுதாரர்களை பிரிந்து வாழ்ந்து வருவதாலும், மனுதாரர்கள் தங்களைத்தாங்களே பராமரித்துக்கொள்ள போதிய வசதியில்லாமல் கஷ்ட ஜீவனம் நடத்தி



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:51:58 +0530

வருவதாலும் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரருக்கு மனைவி என்ற வகையிலும் 1ம் மனுதாரருக்கு தகப்பனார் என்ற வகையிலும் ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவர் என்பதாலும் மனுவில் கோரியுள்ள ஜீவனாம்சம் வழங்கி உத்தரவிட வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**7)** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 2ம் மனுதாரரை விவாகரத்து செய்துவிட்டாலும், அவர் போதிய பொருளாதார வசதியுடன் இருப்பதாலும் 2ம் மனுதாரருக்கு எவ்வித ஜீவனாம்ச தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், 1ம் இளவர் மனுதாரரை பராமரிக்கும் பொறுப்பு 2மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு உண்டு என்பதால் 1ம் இளவர் மனுதாரை பொறுத்து குறைந்தபட்ச ஜீவனாம்ச தொகை நிர்ணயம் செய்யவேண்டுமென வாதிடப்பட்டது.

**7.1)** இவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், 2ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்குமிடைய 28.01.2018 ம் தேதி திருமணம் நடந்தது என்பது ம.சா.ஆ.1 திருமண பத்திரிக்கையின் மூலமும், அத்திருமணத்தின் பயனாக 1ம் மனுதாரர் பிறந்துள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

**7.2)** மேலும், 2ம் மனுதாரரரால் தாக்கல் செய்யப்பட்ட ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022 மனுவில் இம்மனுவின் எதிர்மனுதாரர் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டு

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:52:05 +0530

ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 2ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்குமிடையேயான திருமண உறவு ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.5 ஆன ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022இல் 20.03.2023ம்தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலிருந்து தெரியவருகிறது. மேலும், ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022 மனுவில் ஜீவனாம்சம் குறித்து எவ்வித பரிகாரமும் மனுதாரரால் கேட்கப்படவில்லை என்பது ம.சா.ஆ.4 ஹெச்.எம்.ஓ.பி.எண்.22/2022 மனுவுரையிலிருந்து தெரியவருகிறது.

**7.3)** இந்நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தும், 2ம் மனுதாரர் அலட்சியப்படுத்தியதால் மனவேதனையில் 2021ம் வருடம் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக குறிப்பிட்டு சாட்சியமளித்தபோதும், 15.08.2024 தேதியிட்ட எ.ம.சா.ஆ.2 மருத்துவ குறிப்புரையானது 2024 மற்றும் 2025 வருடங்களுக்கானதாக உள்ளது. எ.ம.சா.ஆ.3இல்

***" 12.07.2024முதல் 06.08.2024 வரை 26 நாட்கள் ஈட்டிய விடுப்பு மருத்துவ சான்றின்மீது, 07.08.2024 முதல் 15.10.2024 முடிய 70 நாட்கள் அசாதாரணவிடுப்பு (மருத்துவ சான்றின்றி) "***

என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில், மேற்படி எதிர்மனுதாரரின் வாதமானது ஏற்க கூடியதாக இல்லை. மேலும்,எ.ம.சா.ஆ. 3ன்படி எதிர்மனுதாரர் தீயணைப்பு மீட்பு பணிகள் துறையில் பணிபுரிந்து வருகிறார் என்பது நிரூபணமாகிறது. மேலும், எ.ம.சா.ஆ.5ன்படி எதிர்மனுதாரரின் வங்கி கணக்கில் கடைசியாக தொகை ரூ.326/–

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:52:13 +0530

இருப்பதாக குறிப்பிட்டு தாக்கல் செய்தபோதும், எதிர்மனுதாரர் அரசுப்பணியாளர் என்பதால் மாதந்தோறும் பெறும் சம்பளத்திலிருந்து 1, 2 மனுதாரர்களை பராமரிக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் எதிர்மனுதாரருக்கு உள்ளது

**8)** முடிவில், எதிர்மனுதாரர், 1, 2 மனுதாரரர்களுக்கு மனுதாக்கல் செய்த நாள் முதல் மாதந்தோறும் ரூ.20,000/− ஐ 1, 2 மனுதாரர்களின் பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்காக ஒவ்வொரு மாதமும் 05ஆம் தேதிக்குள் நேரிடையாகவோ அல்லது மனுதாரர்களின் வங்கிக் கணக்கிற்கோ வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு செலவுத்தொகையாக ரூ.10,000/−த்தை எதிர்மனுதாரர் 2ம் மனுதாரருக்கு கொடுக்க வேண்டியும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னால் என்னால் படித்துப் பார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:52:19 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**I.** **மனுதாரர் தரப்புச் சாட்சி –**

ம.த.சா.1 –திருமதி.திவ்யா

**II.** **மனுதாரர் தரப்புச் சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| ம.த.சா.ஆ.1 | 28.01.2018 2ம்மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான அழைப்பிதழ் அசல் |
| ம.த.சா.ஆ.2 | 25.01.2022 எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் கொடுத்த அறிவிப்பு – நகல் |
| ம.த.சா.ஆ.3 | 07.02.2022 தேதியிட்ட 2ம் மனுதாரர் வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் கூடியது. |
| ம.த.சா.ஆ.4 | திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் 2ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட H.M.O.P No.22/2022 மனு – நகல் |
| ம.த.சா.ஆ.5 | திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.22/2022ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் |
| ம.த.சா.ஆ.6 | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.த.சா.ஆ.7 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**III.** **எதிர்மனுதாரர் தரப்புச் சாட்சிகள் –**

| | |
|---|---|
| எ.ம.சா.1 | திரு.வேலவன் |
| எ.ம.சா.2 | திரு.பாலாஜி |

**IV.** **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 25.01.2022 தேதியிட்ட மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கறிஞர் மூலமாக எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் |



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.12 15:52:26 +0530

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ. | 2ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வராததால் தற்கொலைக்கு முயற்சி செய்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததற்கான குறிப்பேடு அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 12.07.2024 முதல் 15.10.2024 வரை 2ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வராததால் மனவேதனையில் பணிக்கு செல்லமுடியாமல் மருத்துவ விடுப்பு எடுத்ததற்கான அலுவலக சான்று அசல் |
| எ.ம.சா.ஆ.3 | எதிர்மனுதாரர் பணிக்கு செல்லும்போது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ சான்று அசல் |
| எ.ம.சா.ஆ.4 | எதிர்மனுதாரர் வங்கியில் கடன் பெற்று செலுத்திவரும் மாத தவணை ரசீது நகல் |
| எ.ம.சா.ஆ.5 | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.05.12 15:52:32 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.